1901-1916

(19)

✓

29.12.02 செ. முத்தையமுதலியார்

நகல் -1

# நகல்

நகல்

2 21-12-02

அன்பிற் சிறந்த ஐய!

இவண் க்ஷேமம் தங்கள் க்ஷேமந்தனை யறிந்து கொள்ள அபேக்ஷிக்கின்றேன் இத்துடன் இன்று தபால் மார்க்கமாக, இராமாயணஸாரம் என்று தங்களுக்கு பார்வைக்கனுப்பியிருக்கின்றேன். சேர்ந்த சேதியறிவிக்கவேண்டுகின்றேன் தங்களுக் கொழிவுள்ள காலத்தில் இந்நூலை வாசித்துப் பார்த்து தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றேன். இந்நூலைப் பற்றிப் பின்னும் சிலவித்வான்களுடைய அபிப்பிராயங்கள் முன்னரே வந்துள அவற்றைத் தங்கள் அபிப்பிராயத்தோடு சேர்த்து ஒருங்கே அச்சிட வேண்டுமென்பது தமியேன் விருப்பமும் சூணம் பேட்டை ஜமீன்தாரவர்கள் விருப்பமும் ஆதலின் தாங்கள் தயைசெய்து தங்கள் அபிப்பிராயத்தைக் கூடியசீக்கிரத்தில் அனுப்பினால் நலம்

சிரமங் கொடுத்த விஷயத்தில் மன்னிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
தங்களன்புள்ள
செ. முத்தையமுதலியார்
செய்யூர்
செங்கற்பட்டு ஜில்லா

நகல்

S. Muthaiya mudaliyar

29-12-82

செ. முத்தைய முதலியார்

செய்யூர்

3158

132-133

இலக்கணசாரத்துக்கு
அனுப்பவேண்டும்.

p. 132-133.
த.க. VOL M

(4)